----------------------------------------------------------------------------------------------------------------------------------

# வரலாறு போற்றும் குரு சீடர்கள்



# பார்த்தேன் படித்தேன் தியானித்தேன்



அருள்நிதி முரளீதரன்
(செயலாளர், வேதலோக அன்பு நிலைய அறக்கட்டளை, பொள்ளாச்சி)

அணிந்துரை என்பதால் இக்கருவூலத்தையும் இக்கருவூலச் சொந்தக்காரரையும் இறைநிலைக்கு அர்ப்பணித்து என் இதயம் சொட்ட முதலில் வாழ்த்தி மகிழ்கிறேன்.

சில ஆண்டுகளுக்கு முன் "குருவுடன் வாழ்ந்தவர்" வாழ்க்கை வரலாற்றை - மன்னார்குடி பானுகுமார் - பூமியில் வரைந்து கொடுத்தபோதே - நான் படித்து வியந்திருக்கிறேன்.

"வரலாறு போற்றும் குரு சீடர்கள்" என்ற தலைப்பிலே சரித்திரம் படைத்த, பத்து குருமார்கள் மற்றும் அவர்களது சிஷ்யர்கள் வரலாற்றிற்கு. ஒரு புதிய எழுத்து வடிவம் தந்துள்ளார் பானுகுமார். இன்றைய சமூகச் சூழலுக்கு ஏற்ப செய்திகளைக் கருத்தாக்கம் செய்துள்ளார்.

---

- கணவனைக் குருவாகக் கொண்ட மைத்ரேயி மகரிசி யாக்ஞவல்லியர், தன்மனைவி மமதாவையே குருவாகக் கொண்ட துளசிதாசர்
- தோழியையே குருவாகக் கொண்ட ஜயதேவர், தம்குரு நம்மாழ்வாரையே பரம்பொருளாகக் கொண்ட மதுரகவியாழ்வார்-
- ராமானந்தர் பாதத்தூளியையே உபதேசமாக கொண்ட கபீர்தார், தம் குரு ராமதாசரின் பாதுகையில் ஆட்சி செய்த வீர சிவாஜி
- ராகவேந்திரர் என்ற சீடனையே குருவாகக் கொண்ட சுதீந்திரர், தன் முதல் சந்திப்பிலேயே ஸ்ரீஇராமகிருஷ்ணரை குருவாக ஏற்ற விவேகானந்தர்
- எழு வயதில் கோலி விளையாடிய வேதாத்திரியை தடுத்தாண்ட முதல் குரு பாலகிருஷ்ண நாயக்கர், குருசிஷ்ய உறவுக்கு வழிகாட்டியாக அமைந்த வேதாத்திரி மகரிசி - புலவர் தியாகராஜனார்

போன்ற புகழ்பெற்ற குரு சீடர்களை வரலாற்றை, புதிய கோணத்தில் தனக்கே உரிய பாணியில் பதிவு செய்துள்ள பாங்கு பாராட்டுக்கு உரியதாகும்.

அருள்நிதி மன்னார்குடி பானுகுமார் அவர்களுக்கு - எனது பாசமிகு பாராட்டுக்கள். பல்வேறு பொறுப்புக்களுக்கிடையே, புலவர் தியாகராஜனாருக்கு ஒரு புது மகுடம் சூட்டியுள்ளார். அவர் பணி தொடர்ந்து செழிக்க வாழ்த்துகிறேன்.

**புதுப்புனலாக புறப்பட்டுள்ள இப் புதிய சாசனம் புதிய சிந்தனைகளை நம்மில் தோற்றுவித்து புனித வழ்வில் நம்மை வார்த்தெடுக்கும் என்பதில் ஐயமில்லை.**

**திருப்பூர்,** **குருவின் தொண்டில்,**

**14.-08-2019** **டி. ஆர். முரளீதரன்**

# குரு நம்மைத் தேடி வருவார்

"குரு பிரம்மா குருர் விஷ்ணு. குருர் தேவோமஉறஸ்வர.

குரு சாட்சாத் பரம்ப்ரம்ம தஸ்மை ஸ்ரீகுரவே நம."

குருவைப் பற்றிய பிரபலமான துதி இது. பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோர் வடிவில், குரு உள்ளார் என்பது பொதுவான பொருள்.

இதற்கு சரியான பொருள் - குரு சீடனிடம் தெய்விகச் சிந்தனைகளை உருவாக்குவதால் அவர் படைக்கும் தெய்வமான பிரம்மாவுக்கு ஒப்பானவர்.

சீடனிடம் உள்ள, உயரிய பண்புகளை வளர்ப்பதால் காக்கும் தெய்வமான விஷ்ணுவுக்குச் சமமானவர்.

சீடனின் தீய குணங்களை அழிப்பதால் சம்உறார மூர்த்தியான ருத்திரனுக்குச் சமமாகிறார் என்பதாகும்.

குரு என்பவர் யார்? விளக்கம் தருகிறார் வேதாத்திரி மகரிசி.

"குரு என்றால் அவர் தன்னை அறிந்தவர். அவருடைய உதவி இவனுக்குக் கிடைப்பதற்கு இங்கே அவன் ஒரு நிமிடமாகிலும் சிந்தித்திருக்க வேண்டும். தேடி இருக்க வேண்டும்.

நான் பிறந்து வந்துள்ளேனே என்னைப் பற்றி எதுவுமே தெரியவில்லையே - தெரிந்து கொள்ள வேண்டும் என்று இவனாக நினைத்திருந்தாலும் சரி, அல்லது இவனுடைய பெற்றோர்கள் நினைத்து இருந்தாலும் சரி, அந்த எண்ணம் நிறைவேறாமல்

---

தொடர்ந்து வந்து இருந்தாலும் சரி. அது கட்டாயம் அதற்குரிய ஒரு குருவைத் தேடிக் கொடுத்து விடும்."

## குரு பிரம்மம்.      ஆச்சாரியார் - (குரு)

அகத்தவத்தின் மூலமான பிரம்மத்தையும், தன் ஆன்மாவையும், மெய்ஞ்ஞானத்தையும், இயற்கையையும், விஞ்ஞானத்தையும் உணர்ந்த, உயர்த்த வல்ல ஞானிகளையே நாம் ஆச்சாரியர் என்றும் குரு என்றும் அழைக்கின்றோம்.

ஏனென்றால் "கு" என்ற எழுத்திற்கு "இருள்" என்றும், "ரு" என்ற எழுத்திற்கு "வெளிச்சம்" என்றும் பெரியோர்கள் விளக்கம் தருவர்.

இத்தகைய ஞானிகளே சிற்றறிவின் துணை கொண்டு சிற்றின்பத்தில் திளைத்துக் கொண்டு இருக்கும் உலக மக்களை தன் ஆத்ம பலத்தால் அவர்களின் சிற்றிவை மெய்யறிவாக மாற்றும் வித்தையை உபதேசித்து அதன் மூலம் பேரின்பத்தை (வீடுபேறு) அடையச் செய்யும் ப்ரத்யக்ஷ தெய்வமே குரு ஆவார்.

"தப்பாது குரு உயர்வை மதிப்போர் தம்மைத்

தரத்தில் உயர்த்திப் பிறவிப் பயனை நல்கும்"

இதனையே வேதமும்" ஆச்சார்யோ தேவா பவ", அதாவது தெய்வமே குரு வடிவத்தில் உள்ளது. திருமூலரும்,

"தெளிவு குருவின் திருமேனி காணல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவின் திருவுரு சிந்தித்தல் தானே"

என்று கூறுகிறார்.

இறைவனை தாயுமானவர் வர்ணனை செய்கிறார். ஆனந்த சொரூபமாகவும், அறிவு சொரூபமாகவும் இருக்கின்ற இறைவனே குருவாக இருக்கிறார்.

## குரு அவசியமா? விடையளிக்க வருகிறார்கள் . . .

இராமகிருஷ்ணர். குரு பலருக்கு அவசியம். ஆனால் குருவின் வார்த்தைகளில் நம்பிக்கை வைக்கவேண்டும். குருவைக் கடவுளாக உணர்ந்தால் வெற்றிதான்.

சச்சிதானந்தம்தான் குரு. சிவசாதனை செய்து, இஷ்ட தெய்வத்தின் காட்சி கிடைக்கும் வேளையில், குரு தோன்றி, இதோ பார்! உன் இஷ்ட தெய்வம் என்று கூறுகிறார்.

பிறகு இஷ்ட தெய்வத்தில் அவர் ஒடுங்கிவிடுகிறார். குரு யாரோ அவரேதான் இஷ்ட தெய்வம். இஷ்ட தெய்வத்தை நோக்கி நாம் செல்வதற்கு அடியெடுத்து கொடுப்பவர் குரு.

குரு ஒரு நண்பனைப் போல் கையைப் பிடித்து அழைத்துச் செல்கிறார். எல்லோரும் குரு ஆகிவிட முடியாது. பெரிய மரக்கட்டை தானும் மிதக்கும். பல மனிதர்களையும் மிருகங்களையும்கூட ஏற்றிச் செல்லும்.

ஆனால் உறுதியற்ற கட்டையின் மீது ஏறினால் கட்டையும் முழ்கும். ஏறியவனும் முழ்குவான்.

ஆகவே உலகை வழிநடத்த ஒவ்வொரு யுகத்திலும் இறைவனே குருவாக அவதரிக்கிறார்.

வேதாத்திரி மகரிசி - புலனறிவின் விரைவில் ஆழ்ந்துள்ள போது இறைநிலை விளக்கம் பெற முடியாது. இவ்விரைவு குறைந்து

---

அறிவிற்கு நிலைபேறு கிட்ட வேண்டும். அதற்கு அகநோக்குப் பயிற்சி தேவை.

அகம்நோக்கி அறிவு நிலை பெற வேண்டுமெனில் உயிராற்றலை அறிவு உணர்தலாகப் பெற வேண்டும்.

உயிராற்றலோ ஒவ்வொருவருக்கும் வினைப் பயனுக்கேற்ப பிறவியை உருவாக்கும் நியதியின் கீழ் மூலாதாரத்தில் சுழற்சி விரைவாக ஆற்றி வருகின்றது.

உடலையும் அறிவையும் நடத்திக் கொண்டே பிறவிக்கும் வழி தேடிக் கொண்டிருக்கும் இந்த உயிராற்றலை யோகிகள் குண்டலினி சக்தி என்ற சிறப்புப்படுத்திக் கூறுகின்றார்கள். இங்கேதான் சீவகாந்த சக்தி மையம் கொண்டுள்ளது. இவ்வுயிர் ஆற்றலின் விரைவை மேல்நோக்கித் திருப்ப வேண்டும். இதனை ஒருவர் தானே முயன்று பெருவதென்பது அரிது.

அகநோக்குப் பயிற்சியல் முழுமை பெற்ற ஆசானின் அருள் வேண்டும். இறையுணர்வு விளக்கம் பெற்ற பேரறிஞனை ஆசிரியனாக்கப் பெற்றுதான் அவன் வழிகாட்ட, தெளிவுரை கூற இறையுணர்வான இப்பெரும் பதம் அடைய வேண்டும்.

சரித்திரத்திலும் சரி நமது நினைவிலும் சரி நீங்காத இடம் பெறும் சில குரு சீடர்களை இப்போது நம் நினைவுக்கு கொண்டு வந்து இன்புறுவோம்.

செங்கற்பட்டு      வழக்கமான வணக்கங்களுடன்

25.05.2018      மன்னார்குடி பானுகுமார்

---


வரலாறு போற்றும் குரு சீடர்கள்.
மன்னார்குடி பானுகுமார்.
ராஜம் பதிப்பகம்.

---

# பொருளடக்கம்

1. கணவனைக் குருவாகக் கொண்ட மைத்ரேயி.
2. மனைவியையே குருவாகக் கொண்டவர்
3. தோழியே குரு
4. குருவையே பரம்பொருளாகக் கொண்டவர்
5. பாதத்தூளி செய்த உபதேசம்
6. குரு பாதுகையில் ஆட்சி.
7. சீடனையே குருவாகக் கொண்டவர்
8. முதல் சந்திப்பிலேயே குருவானவர்.
9. விளையாட்டை தடுத்தவரே குருவானார்
10. குருசிஷ்ய உறவுக்கு வழிகாட்டியாக அமைந்தவர்கள்.



## 1. கணவனைக் குருவாகக் கொண்ட மைத்ரேயி

ஸ்ரீ யாக்ஞவல்கியர் சிறந்த யோகீஸ்வரர்! இவர் சுக்லயஜுர் வேதத்தை காயத்ரி தேவியின் வழிகாட்டலின்படி சூரிய பகவானிடம் கற்று வெளிக்கொணர்ந்தவர்.

எண்ணற்ற கிரந்தங்களை இயற்றியவர். இவருடைய பிரகதாரண்ய உபநிஷத் என்ற நூல் ஆன்மிகத்தையும் ஆன்மாவின் மேன்மையையும் விவரிக்கின்றது.

இவருடைய ஸ்மிருதிகள் பல சட்ட நுணுக்கங்களை தெளிவாகத் தெரிவிக்கின்றது.

மகரிசி யாக்ஞவல்கியருக்கு இரண்டு மனைவிகள். மூத்தவள் காத்யாயினி. இளையவள் மைத்ரேயி. மூத்தவளுக்கு ஆசிரமச் சூழ்நிலையும் செல்வமும் மிகவும் பிடித்திருந்தன.

ஒரு நாள் மகரிசி, "உங்கள் சௌகரியமான வாழ்க்கைக்குத் தேவையான வசதிகள் இருக்கின்றன. இங்கு சுகமாக இருங்கள். நான் சென்று வருகிறேன்" என்றார். காத்யாயினி சந்தோஷத்துடன் சம்மதித்தாள்.

ஆனால் மைத்ரேயி, "ஆசிரமத்தில் இவ்வளவு சௌகரியங்கள் இருக்கும் போது, ஆசிரமத்தில் நீங்கள் ஏன் எங்கேயோ செல்ல வேண்டும்? அதன் இரகசியம் என்ன?" என்று வினவினாள்.

யாய்ஞவல்கியர், "நானும் ஒரு சுகத்தைத்தான் நாடிச் செல்கிறேன். அது பிரம்மானந்தம். ஆனால் அதன் பாதை மிகக் கடினமானது. உங்களுக்கெல்லாம் சரிப்படாது" என்றார்.

---



மைத்ரேயியிடமிருந்து உடனே பதில் வந்தது. "எனக்கு இங்குள்ள சுகம் வேண்டாம். என்னை சிஷ்யையாக ஏற்று அழைத்துச் செல்லுங்கள். தாங்கள் பெறும பிரம்மானந்தத்தில் சிறிதளவாவது எனக்குக் கிடைக்க அருளுங்கள்." அக்கணமே தம்பதிகளிடம் குரு சிஷ்ய பாவம் தோன்லாயிற்று.

---

---

## 2. மனைவியையே குருவாகக் கொண்டவர்

துளசிதாசர் (துள்சிதாஸ் (1532-1623) ஒரு பெரும் அவாதி பக்தா (பக்தர்), தத்துவஞானி மற்றும் பாடலாசிரியர் ஆவார்.

பதினாறாம் நூற்றாண்டில் இந்தியில் இராமாயணத்தினை 'இராமன் சரித மானஸ்' எனும் பெயரில் எழுதினார் துளசிதாசர். துளசிதாசர், பெரும் முனிவர் வால்மீகியின் அவதாரமாகக் கருதப்படுகிறார்.

துளசிதாசர் இராமாயணம் எழுதும் முன் திவ்ய தேச யாத்திரையாக இராமேசுவரம் வந்ததாகவும், அங்கே கம்பராமாயணத்தினைக் கேட்கும் பேறு பெற்றதாகவும் கம்பன் காவியத்தின் நயங்களை தன்னுடைய காதையில் பல இடங்களில் கையாண்டுள்ளதாகவும் ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.

துளசிதாசருக்குத் தன் மனைவி மீது அடங்காத அன்பு. அவளை விட்டு அவர் பிரியவே விரும்புவதில்லை.


அவள் பிறந்தகம் சென்றிருந்தபோது இவருக்கு அவளைப் பார்க்க வேண்டும என்ற ஆவல் வந்துவிட்டது.

பேய் மழையால் நதியில் வெள்ளம் பெருக்கெடுத்தது. இதை எல்லாம் துளசிதாசர் லட்சியம் செய்யவில்லை.

அப்பேர்ப்பட்ட மழை வெள்ளத்தில் நீந்தி வந்தும் இரவானதால் தாளிடப்பட்ட வீட்டில் அவரால் போ முடியவில்லை.

மதில்மேல் தொங்கிய பாம்பைக் கயிறு என நினைத்து அதைப் பிடித்து ஏறி உள்ளே குதித்து, தன் மனைவி முன் நின்றார்.

---




இவ்வளவு கஷ்டப்பட்டு வந்த கணவரைக் கண்ட மனைவி, "எப்படி வந்தீர்கள்!" என்றாள். துளசிதாசர் தாம் வந்த விவரங்களை விவரித்தார்.

"அடடா! என்ன பேதை மனிதர் நீங்கள்?" இந்த அழியும் உடம்பின் மீது இவ்வளவு மோகமா?

இந்த ஆவல், இந்த உறுதி - இவைகளில் நூறில் ஒரு பங்கு இறைவனிடம் வைத்தால் போதுமே. உங்கள் குறிக்கோள் கேவலம் ஒரு பெண்தானா?".

மனைவி மமதாவிடமிருந்து உபதேசம் கிடைத்துவிட்டது. துளசிதாசரின் ஞானக் கண்கள் திறந்தன.

---

-------------------------------------------------------------------------------------------------------------------------------

## 3. தோழியே குரு

கீத கோவிந்தம் இயற்றியவர் ஜயதேவர். இப்பாடல்கள் கண்ணபிரானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டவை.

கிருஷ்ணனை பரமாத்மாவாகவும், ராதையை ஜீவாத்மாமாவாகவும், மாயை விலக்கி வழிகாட்டும் குருவாக தோழி - ஸகியாக பாவித்தவர் ஜயதேவர்

தூது செல்லும் தோழி ஸகியை சத்குருவாகவும் பாவித்து, சத்குரு மூலமே நாம் இறைவனது திருவடிகளைப் பெற முடியும் என்ற உண்மையை விளக்கும் மகா காவியம் கீத கோவிந்தம்.



இவை ஒவ்வொன்றும் எட்டு அடிகள் கொண்தால் “அஷ்டபதி” என்று பெயர் பெற்றது.

ஜயதேவர் செய்த உபதேசம், “இக்கலியுகத்தில் இறைவனை அடையும் பல வகைகளில் தாஸ்யம்(பாதசேவை), ஸக்யம் (நட்பு),

---

ஆத்ம நிவேதனம் (தன்னையே அர்ப்பணித்தல்) என்பவையே சுலபமான மார்க்கங்களாகும்."

**கீத கோவிந்தம்** பன்னிரண்டு அத்தியாயங்களைக் கொண்ட ஒரு காவியம் ஆகும்.

பக்தி இலக்கியத்தின் முக்கியமான நூலாகவும், சமஸ்கிருத கவிதை நூல்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாகவும் திகழ்கிறது இந்நூல்.

சமஸ்கிருதத்தில் காவியங்கள் இரண்டு வகைப்படும். அவை *சாதாரண காவியம்*, மற்றும் *மஹா காவியம்* ஆகும். கீத கோவிந்தம் மஹா காவியம் வகையைச் சார்ந்ததாகும்.

இதன் ஒவ்வொரு பாகமும் 24 பிரபந்தங்களை அடக்கியதாகும். ஒவ்வொரு பிரபந்தத்திலும் எட்டு இருவரிச் செய்யுள்கள் இருக்கும். அதனால் இவற்றுக்கு அஷ்டபதி என்றும் பெயர்.

'சந்தன சர்சித நீல களேபர' என்று துவங்கும் அஷ்டபதி, நாட்டியங்களிலும் மற்றும் இசை அரங்குகளிலும் இன்றளவும் மிகவும் பிரபலம்.

1792 இல், சர் வில்லியம் ஜோன்ஸ் என்பவரால் முதல்முதலில் இந்நூல் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது. அதன் பின்னர் உலகம் முழுதும் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

---

## 4. குருவையே பரம்பொருளாகக் கொண்டவர்

மதுரகவி ஆழ்வார் வைணவ நெறியைப் பின்பற்றி பக்தியில் சிறந்து விளங்கிய பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர்.

பாண்டிய நாட்டில் திருக்குருகூர் என்னும் ஆழ்வார்திருநகரிக் கருகிலுள்ள திருக்கோளூரில் ஈச்வர வருசம் சித்திரை மாதம் சித்திரை நட்சத்திரத்தில் பிறந்தார்.

நம்மாழ்வார் பிறந்த கி. பி 798 க்குச் சற்று முன் பிறந்தவர். நம்மாழ்வார்க்குப் பிறகும் வாழ்ந்தவர்.

இவர் வேத சாத்திரங்களை நன்கு பயின்றார். ஒரு காலகட்டத்தில் உலக விஷயங்களில் பற்று நீங்கி அயோத்தி, மதுரா, முதலிய வடநாட்டு திவ்ய தேசங்களை சேவிக்கச் சென்றார்.

அயோத்தியில் தங்கியிருந்தபோது ஒரு நாளிரவில் வெளியே வந்தபோது தெற்கே ஒரு பேரொளியைக் காணுற்று வியப்படைந்தார். மறுநாளிரவிலும் அதே ஒளி அவ்வாறே தோன்றிற்று.

உடனே மதுரகவிகள் 'தெற்கே ஓர் அதிசயம் நிகழ்ந்துள்ளது; அதைச் சென்று காணவேண்டும்' என்று தீர்மானித்து தெற்கு நோக்கிப் புறப்பட்டார்.

அவ்வொளி தோன்றிய இடமாகிய திருக்குருகூரை அடைந்தார். புளியமரத்தின் கீழ் எழுந்தருளியிருந்த அவ்வொளியாகிய நம்மாழ்வாரை சமாதியிலிருக்கக் கண்டார்.

முதலில் ஒரு பெரிய கல்லை கீழே போட்டு அந்தசத்தத்தினால் அவர் சமாதியைக் கலைத்தார். மேலும் அவர் நிலையை அறிய விரும்பி

“*செத்ததன் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத்தின்று எங்கே கிடக்கும்?*”

என்று வினவினார்.

"*அத்தைத் தின்று அங்கே கிடக்கும்*"

என்று விடை வந்தது. இந்த வினா, விடை இரண்டிலும் தத்துவம் புதைந்துள்ளது.

'சூட்சுமமாயிருக்கும் ஜீவன் பிறப்பெடுத்தால் அதன் வாழ்வு எப்படி இருக்கும்?' என்பது கேள்வி. 'தன் புண்யபாவங்களின் பயன்களை நுகர்வதே அதன் வாழ்க்கையாக இருக்கும்' என்பதே விடை.


மதுரகவிகள் அக்கணமே அவரை தன் ஆசாரியராக வரித்தார். நம்மாழ்வாரும் இவரை அடிமை கொண்டு, மூவகைத் தத்துவங்களின் இயல்பையும் மற்றும் அறியவேண்டிய யோக இரகசிய உண்மைகளையும் சீடனுக்கு உபதேசித்தார்.

இவர் பெருமானைத் தன் பாசுரங்களால் பாடாமல் தன் ஆசாரியனான நம்மாழ்வாரையே சிறந்த தெய்வமாக எண்ணி அவரைப் போற்றியே பதினோரு பாசுரங்களைப் பாடியுள்ளார்.

மதுரகவியாழ்வார் தன் குருவான நம்மாழ்வாரையே தெய்வம் என மதித்தவர்.

இவர் பாடிய "கண்ணிநுண் சிறுத்தாம்பு" என்று ஆரம்பமாகும் பத்துப் பாடல்கள் பிரசித்தி பெற்றவை. இவர் குருவையே பாடினார். திருமாலைக்கூடப் பாடவில்லை.

பரமனுக்கும் ஆத்மாவுக்கும் பத்துவிதமான சம்பந்தங்கள் உள்ளன. அப்பத்து சம்மபந்தங்களையும் குருவிற்கும் சீடனுக்கும் உள்ளதெனப் பணிந்து குரு பக்தியை நிலை நாட்டியவர் மதுரகவியாழ்வார்.




நம்மாழ்வாரும் மதுரகவியாழ்வாரும்

அந்த பத்து தொடர்கள்

1. நினைக்க இனிமையாக இருத்தல்
2. வணங்கி வழிபடத்தக்கவனாக இருத்தல்
3. ஆட்பட்டால் பல பேறுகள் வந்தடைதல்
4. பல உறவினராகவும் இருத்தல்
5. மற்ற விஷயங்களிலுள்ள ஆசையை மாற்றுதல்
6. தானே அடிமையாக ஏற்றல்
7. பாவம் போக்குதல்
8. மிகுந்த கருணை காட்டுதல்
9. தத்துவார்த்தத்தை விளக்கியருள் செய்தல்
10. தன்னைப் போல் ஆக்குதல்.

இந்தப் பத்து அர்த்தங்கள் அடங்கியதே “**கண்ணிநுண் சிறுத்தாம்பு.**”

---

நாலாயிரத்திவ்ய பிரபந்தத்தினுள் மதுரகவி ஆழ்வார் அருளிச்செய்தது கண்ணி நுண் சிறுத்தாம்பு என்ற ஒரே பதிகம் தான்.

அதனிலுள்ள பாடல்கள் திருக்குருகூர் நம்பி நம்மாழ்வாரை ஏத்திப்பாடுவதே. அதனில் சிலபாடல்கள்,

கண்ணி நுண் சிறுத் தாம்பினால் கட்டு உண்ணப்
பண்ணிய பெரு மாயன் என் அப்பனில்
நண்ணித் தென் குருகூர் நம்பி என்றக்கால்
அண்ணிக்கும் அமுது ஊறும் என் நாவுக்கே

நாவினால் நவிற்று இன்பம் எய்தினேன்
மேவினேன் அவன் பொன்னடி மெய்ம்மையே
தேவு மற்று அறியேன் குருகூர் நம்பி
பாவின் இன்னிசை பாடித் திரிவனே

திரிதந்து ஆகிலும் தேவபிரான் உடைக்
கரிய கோலத் திருவுருக் காண்பன் நான்
பெரிய வண் குருகூர் நகர் நம்பிக்கு ஆள்-
உரியனாய் அடியேன் பெற்ற நன்மையே

அன்பன் தன்னை அடைந்தவர்கட்கு எல்லாம்
அன்பன் தென் குருகூர் நகர் நம்பிக்கு
அன்பனாய் மதுரகவி சொன்ன சொல்
நம்புவார் பதி வைகுந்தம் காண்மினே

---

---




புலவருடன் நூல் ஆசிரியர் அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

---

---

## 5. பாதத்தூளி செய்த உபதேசம்

கபீர்தாஸ் முகமதியராக இருந்தும் இவருக்கு ராமனிடம் அபார பக்தி. இவர் ராமானந்தரைச்சந்தித்து உபதேசம் பெற முனைந்தார். ஆனால், அவரது சீடர்கள் இவரை வேற்று மத்தினர் என்று அடித்துத் துரத்திவிட்டனர்.



ஒரு நாள் வியற்காலையில் ராமானந்தர் கங்கைக்கு ஸ்தானத்திற்கு வரும்போது கபீர் படித்தறையில் படுத்திருந்தார்.

இருட்டில் கபீரை ராமானந்தர் மிதித்துவிட்டார். “யாரையே மதித்து விட்டோமே” என்று வருந்தி “ராம, ராம” என்றார். பாதத்தூளி தன்மேல் பட்டதும் அவர், “ராம ராம” என்று சொல்வதையே திருவடி துட்சை அளித்து தனக்கு உபதேசம் செய்துவிட்டாக, கபீர்தாஸ் பக்தி பரவசமானர். ராமானந்தரும் அவரைச் சீடராக ஏற்றுக் கொண்டார்.

கபீர் என்பவர் இந்தியாவின் ஒரு கவிஞர், மதகுரு, புனிதரும் ஆவார். இராமானந்தரால் சீடராக ஏற்றுக் கொள்ளப்பட்டவர்.

அவரது எழுத்துக்களால் இந்து சமய பக்தி யக்கத்தில் தாக்கத்தை ஏற்படுதியவர். அவரது பாடல்கள் சீக்கியப் புனித நூலான குரு கிரந்த் சாகிப்பில் உள்ளன.

காசிக்கருகே 'லகர்டேலோ' என்ற ஏரியில் தாமரை மலரில் கிடைத்த குழந்தையை (கபீர்) முஸ்லிம் நெசவாளர் ஒருவர் எடுத்து வளர்த்தார்.

இவரது இளமைப் பருவத்தில் ஒரு இசுலாமியக் குடும்பத்தில் வளர்ந்தார். இருப்பினும் அவரது ஆசிரியரும் இந்து சமய பக்தித் தலைவருமான இராமாநந்தரின் தாக்கம் கபீரிடம் அதிகம் காணப்பட்டது.

இந்து-முஸ்லிம் சமய ஒற்றுமைக்குப் பெரிதும் பாடுபட்டவர். கடவுளிடம் அன்பு செலுத்துவதே நற்கதி அடைய வழி என்றார்.

"உண்மையே இயல்பானது. அது எல்லோர் இதயத்திலும் உறைகின்றது. அவ்வுண்மை அன்பினால் வெளிப்படுகிறது"

என்ற கருத்தை உடையவர் "பக்தியை வலியுறுத்தாத சமயம் சமயமன்று" என்றார்.

மேலும் கபீரின் நினைவை போற்றும் விதமாக, 1952ஆம் ஆண்டில் இந்திய அரசு கபீரின் உருவ அஞ்சல் தலை வெளியிட்டது.

## 6. குரு பாதுகையில் ஆட்சி

பரதன் ராம பாதுகையை சிம்மாசனத்தில வைத்து அதன் பிரதிநிதியாக இருந்து ஆட்சி புரிந்தான் என்கிறது ராமாயணம். அதே மாதிரி மற்றொரு சம்மபவம்.



சத்ரபதி சிவாஜி ஒரு நாள் வேட்டைக்குச் சென்று திரும்புகையில் கிருஷ்ணா நதியில் சில ஓலைச் சுவடிகள் மிதந்து வருவதைக் கண்டார். அவற்றை எடுத்துப் பார்த்தபோது அவற்றில் உயர்ந்த கருத்துக்கள் கொண்ட கவிதைகள் காணப்பட்டன.



அதன் அடியில் "ராமதாசன்" என்ற கையொப்பம் இருந்தது. ஒரு நாள் கானகத்தில் அந்த ராமதாசனையே காணும் வாய்ப்பு சிவாஜிக்கு ஏற்பட்டது.


அவர் காலில் விழுந்து தனக்கு ஞான உபதேசம் செய்யும்படி கேட்டார். அரசனுக்கு ஞான உபதேசம் செய்து அவன் ஞானியாக மாறிவிட்டால் நாட்டைப் பரிபாலிப்பது யார்?" என்று ராமதாசர் மறுத்துவிட்டார். கடைசியில் வறுபுறுத்தவே உபதேசம்செய்தார்.

சிவாஜி தன் உடல், பொருள், ஆவி யாவற்றையும் ராமதாசருக்கு அர்ப்பணித்துவிட்டதால் அரசியல் பொறுப்பும் மக்களைப் பரிபாலிப்பதும் இனி அவருடையதே என்று சொன்னார்.

ராமதாசர் சிவாஜியின் குருபக்திக்கு மெச்சி தனக்குப் பதிலாக தன் பிரதிநிதியாக இருந்து நாட்டடை ஆளும்படியும் - தேசத்துக் கொடியை காவிக் கொடியாகவும் - நாட்டில் ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது "ராம், ராம்" என்று சொல்லியே பேசத்தொடங்க வேண்டும் என்று கூறி சிவாஜியும் அவர் கூறியபடியே ஆட்சி புரியலானார்.

## 7. பீடனையே குருவாகக் கொண்டவர்

மந்திராலய மகானான ஸ்ரீராகவேந்திரரின் பூர்வாசிரம பெயர் திருவேங்கட பட்டர்.




இவர் கும்பகோணத்தில் சுதீந்திர சுவாமிகளிடம் வித்தையை கற்றார். வேங்கடபட்டரின் நுண்ணறிவைக் கண்டு தமக்கு அறிவு புகட்ட வந்த ஆசார்யனாகவே கொண்டு அவரிடம் சுதீந்திரர் அன்பைச் சொரிந்தார்.

ஒரு நாள் நள்ளிரவில் சிஷ்யர்கள் தூங்கிக் கொண்டிருந்த அறைக்கு சுதீந்திரர் வந்தார்.

அங்கு வேங்கட பட்டரைக் காணவில்லை. வெளிப்புறத்தில் ஒரு மூலையில் கட்டாந்தரையில் கட்டின வேட்டியுடன் குளிரில் விறைத்தபடி வேங்கடபட்டர் உறங்குவதைக் கண்டு மனம் வெதும்பினார்.

---

அவர் தலைமாட்டில் உலர்ந்த சருகுகள் எரிக்கப்பட்டுக் கருகிக் கிடந்தன. மற்றொரு பக்கத்தில் சில ஓலைச் சுவடிகளும் எழுத்தாணியும் இருந்தன.

குரு தன் காஷாணத்தை எடுத்து அவர்மீது போர்த்திவிட்டு ஓலைச்சுவடிகளை எடுத்துக்கொண்டு போய் விட்டார்.

பகலில் சுவாமிகள் சபையைக் கூட்டினார். உலர்ந்த சருகுகளைக் கொளுத்தி அந்த வெளிச்சத்தில் இரவெல்லாம் வேங்கட பட்டர் தெளிவான வியாக்கியானங்கள் எழுதி தமது அஞ்ஞானத்தையும் போக்கிவிட்டதாக சுதீந்திரர் கருதினார்.

இவ்வாறு பட்டர் பகலில் பாடம் கேட்டு இரவில் நியாய ஸீதைக்கு தன் வியாக்கியானங்களை எழுதி முடித்தார். இந்நூலுக்கு சுதீந்திரர் சுவாமிகள், “ஸீதாபரிமளம்” என்று பெயரை வைத்தார்.

இதனால் வேங்கட பட்டருக்கு பரிமளாச்சாரியார் என்ற பெயர் ஏற்பட்டது. வேங்கட பட்டரைத் தனக்குப் பின் பட்டத்திற்கு வாரிசாக்க சுதீந்திரர் அரும்பாடுபட்டார்.

பிறகு ராகவனே கனவில் வந்து வேங்கட பட்டருக்கு துறவு மேற்கொள்ள ஆசி கூறியதால் வேங்கட பட்டர் ராகவேந்திரர் ஆனார்.

---

## 8. முதல் சந்திப்பிலேயே குருவானவர்

முதன்முறையாக நரேந்திரர், ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரைத் தரிசிப்பதற்காகத் தட்சிணேசுவரத்தக்கு வந்தார்.



நரேந்திரர் கல்லூரியில் எப்.ஏ. படித்துக்கொண்டிருந்தார். ஆயினும் இளம் வயதிலேயே நரேந்திரர் உலகியல் பற்று இல்லாதவராகவே இருந்தார்.

தட்சிணேசுவரத்துக்கு நண்பருன் சென்ற நரேந்திரர் கலைந்த தலைமுடியும் கசங்கிய ஆடையுமாகத் தோற்றமளித்தார்.

குருதேவரை அவர் சந்தித்தபோது, ஒரு பாடல் பாடும்படி குருதேவர் கூறினார். நரேந்திரர் உள்ளம் ஒன்றிப் பாடும் பொழுதே குருதேவர் தியான நிலையை எய்தினார்.

---

நரேந்திரர் பாடி முடிந்ததும் குருதேவர் தியானம் கலைந்து எழுந்தார். அவருடைய அன்புக்கரங்கள் நரேந்திரரைப் பற்றின.

பின்பு தனியிடத்திற்கு அழைத்துச் சென்றார். குருதேவரின் முகம் அருளைப் பொழிந்தது. கண்களோ அன்பை வழங்கியது. நரேந்திரர் குருதேவரின் அன்பில் தோய்ந்து கட்டுண்டு நின்றிருந்தார்.

"எத்தனை காலமாக உன்னுடைய வருகைக்காக நான் காத்துக் கொண்டிருக்கிறேன் தெரியமா?" என்று உள்ளம் நெக்குருக குருதேவர் கூறினார். மக்களின் உலகியல் பேச்சுக்களைக் கேட்டு தமது காதுகள் வெந்து போகின்றனவே, நெஞ்சத்து உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ள எவரும் இல்லையே என்று கூறி மனம் வாடினார் குருதேவர்.

குருதேவர். நரேந்திரரைப் பார்த்துப்ப பார்த்து மகிழ்ந்து சிரித்தார். பின்பு கரைந்து அழுதார். இனிப்புகளை வாயில் ஊட்டிக் களித்தர்.

தாய்ப் பசு கன்றைக் கண்டதும் அடைகின்ற உவகைகளைக் குருதேவர் அடைந்தார்.

---

முன்காலத்தில் வாழ்ந்த முனிவன் என்றும் மனித வடிவம பெற்று வந்திருக்கிற நாராயணன் என்றும் நரேந்திரரைப் புகழ்ந்து அன்பின் மிகுதியால் குருதேவர் கூறினார்.

இறைவனுக்காகவே அனைத்தையும் துறந்தவர் குருதேவர் என்று நரேந்திரரரின் தெளிந்த சிந்தையில் எண்ணம் தோன்றியது.

புனிதமானவர் என்று உளமாற போற்றிய நரேந்திரர் குருதேரைப பணிந்து வணங்கி முதல் சந்திப்பிலேயே "சரணம்" என்று காலடியில் வீழ்ந்தார்.



Sri Ramakrishna Paramhansa    Swami Vivekananda

---

---

## 9. விளையாட்டை தடுத்தவரே குருவானார்


சென்னை அருகே கூடுவாஞ்சேரியில் ஏழை குடும்பத்தில் பிறந்தவர் வேதாத்திரி மகரிஷி.

இவரது தந்தைப் பெயர் வரதப்பன். தாயார் பெயர் சின்னம்மாள். நெசவுத் தொழிலை செய்து குடும்பம் நடத்தி வந்தனர்.

சிறுவயது முதலே வேதாத்திரி மகரிஷி அவரது தாயார் சின்னம்மாளிடம் நிறைய பக்தி கதைகளையும், புராணக் கதைகளையும் அறிந்து கொண்டார்.

கதை கேட்கும் போதே சிறுவன் வேதாத்திரி தனக்கு ஏற்படும் சந்தேகங்களை கேள்விகளாக தாய் சின்னமாளிடம் கேட்பார். அவரது தாயாரும் சிறுவனின் கேள்விக்கு சளைக்காமல் பதில் கூறுவார்.

இத்தகைய கேள்வி ஞானமே பின்னாளில் “சொன்னால் மட்டும் நம்பாதே, சுயமாய் சிந்தித்தே தெளிவாய்” இவரது தாரக மந்திரமாக விளங்கிய உருவாவதற்கு காரணமாக விளங்கியது என்றே கூறலாம்.



இவரது குடும்பசூழல் இவருக்கு அதிகம் படிக்க வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. தன்னுடைய சொந்த ஊரில் மூன்றாவது வகுப்புவரை

படித்தவர், பின்னர் தங்கள் குடும்ப தொழிலான தறி நெய்தலை செய்யத் தொடங்கினார்.

இளமைப் பருவம் வாழ்வின் வசந்த காலமாகும். அதுவும் கிராமத்து மண் வாசனை, சடுகுடு. கில்லி, கோலி போன்ற செலவில்லா விளையாட்டு வேடிக்கைகள்.

ஏழு வயதில் சிறுவன் வேதாத்திரி தன் தோழர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தான்.

பாலகிருஷ்ண நாயக்கர் என்ற பெரியவர் அந்தப்பக்கம் வந்தார். கோலி வியைாடும் சிறுவனைப் பார்த்தார்.

நல்ல சிவப்பு நிறம், பால் வடியும் முகம், கூர்மையான அறிவுமிக்க குழந்தையின் பொழுது வீணாவதைப் பார்த்தார் பெரியவர்.

குழந்தையையே சிறிது நேரம் உற்றுக் கவனித்தார். பார்வையில் பாலகனை ஆட்கொண்டார்.

“அடேய்! இங்கே வாடா, உனக்கு என்ன பெயர்? என்று கேட்டார்.

“வேதாத்திரி”

“சரி இப்போது கோலி வியைாடுகிறாயே? விளையாட்டில் உனக்கு என்ன கிடைக்கும்?”

“அதெல்லாம் ஒன்றுமில்லை. ஒரு வேடிக்கைக்காக வியைாடிக் கொண்டிருக்கிறேன்.”

“நான் தினமும் காலணா கொடுக்கிறேன் உனக்கு. கோலி விளையாடும் பழக்கத்தை விட்டுவிட்டு அந்த நேரம் என்னிடம் வந்துவிடு. நான் உனக்கு பஜனைப் பாடல்கள் எல்லாம் சொல்லிக் கொடுக்கிறேன்.”

---

ஒரு மகானின் முதிர்ந்த ஞானத்துடன் கூடிய வலுவான விதை வேதாத்திரியின் இளைமைப் பருவத்தில் விழுந்தது.

வேதாத்திரியின் விளையாட்டைத் தடுத்து முதல் குருவாக அவரை ஆட்கொண்டது இறைநிலை.

வேதாத்தியத்திற்கு முதல் பாதை போட்டுக் கொடுத்தவர் பாலகிருஷ்ண நாயக்கரே ஆவார்.



நந்திவரம் மலையில் வேதாத்திரி மகரிசி தவம் செய்த பாளையில் ஆசிரியர்.

---

------------------------------------------------------------------------------------------------------------------------------------

## 10. குருசிஷ்ய உறவுக்கு வழிகாட்டியவர்கள்

தகுந்த அலைவரிசை வேண்டி தொலைக்காட்சி சேனலைத் திருப்பினால் விருப்பப்பட்ட அலைவரிசை நமக்குக் கிடைக்கும்.

புலவர் தியாராஜனாரும் ஞானத்தைத் தேடும் அலை வரிசையைத் திறந்து வைத்து இருந்தார்.

வேதாத்தி மகரிசியும் புலவரைத் தேடி வந்தார். எப்படி? யார் மூலமாக வந்தார்?




அருட்தந்தை, பதினெட்டு முறை உலகை வலம் வந்த உத்தமராவார். அவரது இரண்டாவது அமெரிக்கப் பயணம் நிறைவு செய்து வந்ததற்காக, கூடுவாஞ்சேரியில் 1974ஆம் ஆண்டு வரவேற்று விழா நடக்க இருந்தது.

புலவரின் ஆன்மீக அன்பர்களில் “திருக்கோயில்” என்ற பத்திரிக்கையின் ஆசிரியர் திரு. முருகவேள் அவர்கள் வேதாத்திரி மகரிசியின் நிகழச்சி நடைபெற இருக்கின்ற விபரத்தை அய்யாவிடம் சொல்லி “நீங்களும் வருகிறீர்களா?” என்று கேட்டார்.

---

"அய்யா நானும் வருகிறேன்" என்று சொல்லிவிட்டார்.

குறிப்பிட்ட நாளன்று இருவரும் புறப்பட்டனர். தத்துவஞானி வேதாத்திரியின் உரையைக் கேட்டு உருகினார் புலவர்.

அவரது பார்வை வீச்சும் அவரது சொல்லும் காந்தம் ஊசியைக் கவர்ந்தழுப்பது போல புலவரைக் கவர்ந்து ஈர்த்தன.

தான் தேடிக்கொண்டிருந்த ஆன்மீகப் பெரியவர் தன்னுடைய குரு இவர்தான். இவரை சிக்கெனப் பிடித்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணத்தால் உறுதி பூண்டார்.






ஸ்ரீஇராமகிருஷ்ணருக்கு தோத்தாப்புரியும் - விவேகானந்தருக்கு ஸ்ரீஇராமகிருஷ்ணரும் - சித்பவானந்தருக்கு சுவாமி சிவானந்தரும் - விசிறி சாமியாருக்கு சுவாமி ராமதாசும் - சிதானந்தருக்கு ரிசிகேஸ் சுவாமி சிவானந்தரும், வேதாத்திரிக்கு பாலகிருஷ்ண நாயக்கரும் (முதல் குரு) தேடி வந்தது போல -- புலவர் தியாராஜனாருக்கு வேதாத்தி மகரிசி குருவாக வந்தார்.

சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றி வந்த புலவர் தியாகராஜருக்கு, தியாகராயநகர் வால்மீகி தெரு அழைப்பு விடுத்தது. ஆம்!

சென்னை தியாகராயநகரில் வால்மீகி தெருவில் வேதாத்திரி மகரிசி அவர்கள் தங்கியிருந்தார்கள்.

அவரிடம் சென்று, புலவர் தியாராஜனார் குணடலினி யோகத்தை முறைப்படி கற்றுக்கொண்டார்.


புலவரின் அன்பில் திளைத்த மகரிசி, அவரைத் தன்னுடைய அணுக்கத் தொண்டராக அமர்த்திக் கொண்டார்.

குரங்குக்குக் குட்டியானது, குரங்கைப் பிடித்துக் கொள்வது போல் குருவை பக்தன் பற்றி நிற்க வேண்டும்.

குரு பார்வை கிடைத்ததும், பூனை தன் குட்டியை தூக்கிச் செல்வது போல், சீடனை குரு தூக்கிச்செல்வார்.

புலவரும் குருவைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார். இன்றளவும் முன்மைச் சீடராக வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

---




"மூர்த்தி தவம் தீர்த்தம் முறையாகச் செய்தோர்க்கு

வார்த்தைச் சொல் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

என்ற தாயுமானவர் வாக்கிற்கிணங்க

- இயேசுவும் பன்னிரு சீடர்களும்,
- யாக்ஞவல்கியரும் மைத்ரேயியும்,
- இராமகிருஷ்ணரும் பதினாறு சீடர்களும்,
- துளசிதாசரும் மமதாவும்,
- மதுரகவியாழ்வாரும் நம்மாழ்வாரும்,
- கபீர்தாசரும் ராமானந்தரும்,
- சத்ரபதி சிவாஜியும் ராமதாசரும்,
- ஸ்ரீராகவேந்திரரும் சுதீந்திரரும்,
- விவேகானந்தரும் ராமகிருஷ்ணரும்,

---

- சகோதரி நிவேதிதையும் விவேகானந்தரும்

குரு சிஷ்ய உறவுக்கு வழிகாட்டியதைப் போல வேதாத்திரி மகரிசியும் புலவர் தியாகராஜரும் குருசிஷ்ய உறவுக்கு நமக்கெல்லாம் வழிகாட்டியாக அமைந்தனர்.

